யா/ விக்ரோறியாக் கல்லூரி

# J/ VICTORIA COLLEGE

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2008

# FOUNDER'S DAY PRIZE - GIVING - 2008

## அதிபர் அறிக்கை
## Principal's Report

Chief Guest

**Mr. K. Ganesh**

Government Agent, Jaffna

**Mrs. Parameswary Ganesh**

Founder's Day Address

**Professor. P. Sivanathan**

Head of the Department - Law, University of Jaffna

**2008-07-18**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ☆ நிகழ்ச்சி நிரல் ☆

01. தாபகர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்தல்

02. மங்கள விளக்கேற்றல்

03. இறைவணக்கம்

04. வரவேற்பு நடனம்

05. வரவேற்புரை
(Welcome Speech by)
Mas. K. Kanaruban (Senior Prefect)

06. அதிபர் அறிக்கை

07. தாபகர் தின உரை

08. Group Song

09. சிறப்பு விருந்தினர் உரை

10. பிரதம விருந்தினர் உரை

11. பரிசில் வழங்கல்

12. நன்றியுரை
**செல்வி. கு. சொரூபிகா** (சிரேஷ்ட மாணவ தலைவி)

13. கல்லூரிக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

எமது கல்லூரியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி பரிசுத்தின அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

இன்றைய பரிசுத்தின வைபவத்தை இனிதே சிறப்பிக்க வருகை தந்திருக்கும் பெருமதிப்பிற்குரிய யாழ்மாவட்ட அரச அதிபர் திரு. க. கணேஷ் அவர்களே, அவர் தம் பாரியார் திருமதி. பரமேஸ்வரி கணேஷ் அவர்களே.

நிறுவுனர் நினைவுப் பேருரை நிகழ்த்த வருகை தந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் P.சிவநாதன் அவர்களே!

சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை எங்கரசு அவர்களே!

சகோதரப் பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே, பழைய மாணவர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, எமது கல்லூரியின் பிரதி அதிபர் அவர்களே, பகுதித் தலைவர்களே, ஆசிரியப் பெருந்தகைகளே, துணை ஆளணியினரே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கங்கள்.

இந்நன்நாளிலே பல்வேறு பொறுப்புகளின் மத்தியிலும் தனது பொன்னான நேரத்தை அர்ப்பணித்து எமது அழைப்பை ஏற்று இன்முகத்துடன் பிரசன்னமாகி விழாவினை மிளிரச் செய்து கொண்டிருக்கும் பிரதம விருந்தினர், அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ் அவர்களைக் கல்லூரியின் சார்பிலே வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது அரச அதிபர் அவர்கள் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் சிறப்பாகச் செயற்பட்டு நெருக்கடியான காலகட்டத்தில், பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் யாழ்மாவட்டத்தைப் பொறுப்பேற்றுள்ளார். இவரது திறமை, அமைதியான ஆழமான பேச்சு, அன்பான பார்வை, இரக்கம் குடிகொண்ட மனது, பலரோடும் பரிவோடு பழகும் முறைமை ஆகிய பண்புகள் மூலம் இச்சவால்களையெல்லாம் சாதுரியமாகக் கையாண்டு மக்களுக்கு சிறந்த சேவையாற்றி அவர்தம் துயர்துடைத்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் வளர வேண்டும், அயல்வீடு வளர வேண்டும், தன்னுடைய கிராமம் வளர வேண்டும், ஒட்டுமெத்தமாக மாவட்டம் வளர வேண்டும் என்ற தூய சிந்தனையோடும், புனிதமான எண்ணத்தோடும் சகலரும் செயலாற்ற வேண்டும் என்பது அவரது உயர்ந்த நோக்கமாகும். அவ்வாறான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை கல்விச் சமூகத்தினரிடம் அவர் சமர்ப்பித்து வருவதை நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிந்துள்ளோம்.

பெருமதிப்பிற்குரிய அரச அதிபர் அவர்களே இன்றைய பரிசளிப்பு வைபவம் மேன்மை நிலையில் உள்ள தூயசிந்தனை கொண்ட தங்களால் அணிசெய்யப்படுவது எமக்குப் பெருமையளிக்கின்றது.

எமது அரச அதிபர் அவர்களின் சீரிய பணிகளுக்கு உறுதுணையாக இருந்து பங்களிப்பு வழங்கும் அன்பும், பரிவும் கொண்ட திருமதி.பரமேஸ்வரி கணேஷ் அவர்களிடமிருந்து நம் மாணவர்கள் பரிசு பெறுவதையிட்டு கல்லூரிச் சமூகம் பேருவகையடைகிறது.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் தனது கோட்டப் பாடசாலைகளின் இடர்களை இனங்கண்டு அவற்றைப் போக்குவதன் மூலம் கல்வி மேம்பாட்டிற்கு உழைத்து வருகின்றார். இவரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

நிறுவுனர் நினைவுப் பேருரை ஆற்ற வருகை தந்திருக்கும் யாழ் பல்கலைக்கழக சட்டத்துறைத்தலைவர் பேராசிரியர் P. சிவநாதன் அவர்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் புகழ்பூத்த மாணவராவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளியற் பட்டதாரியான இவர் யாழ் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளராக இணைந்து தனது திறமையினாலும், அனுபவத்தினாலும் பொருளியற்துறைத் தலைவராக உயர்வு பெற்று, தற்போது சட்டத்துறைத் தலைவராகப் பணிபுரிகிறார். இவர் சிறந்த எழுத்தாளரும் ஆவார். இவர் கேள்வியும் நிரம்பலும், ஒல்லாந்தர் கால வரிமுறைகள், புகையிலை வர்த்தகமும் யாழ்ப்பாணப் பொருளாதாரமும் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். பேராசிரியர் அவர்களையும் வருக வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இந்நன்நாளில் பெருமனதுடன் வருகை தந்திருக்கும் அனைவரையும் வருக வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஆசிரிய ஆளணியினர்:***

எமது கல்லூரியில் தற்போது 56 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களுள் முதுமாணிப்பட்டதாரிகள் 02 பேரும்பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டதாரிகள் 26 பேரும், பட்டதாரிகள் 9 பேரும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 16 பேரும் அடங்குவர்.

நிரந்தர ஆசிரியர்களுள் ஒருவர் நூலக ஆசிரியராகவும் மற்றொருவர் வழிகாட்டல் ஆலோசனைக்குரிய ஆசிரியராகவும் செயற்படுகின்றனர்

***சேவையிலிருந்து ஓய்வு பெறுவோர்***

திரு S.திருக்குமார் அவர்கள் தனது 36 வருட ஆசிரிய சேவையில் 26 வருடங்களை எமது கல்லூரியில் கணிதபாட ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் நிறைவு செய்துள்ளார். இடைநிலை வகுப்புக்களில் கணிதபாடத்தை சிறந்த முறையில் கற்பித்து க.பொ.த(சா/த) பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு வழிகாட்டி வந்துள்ளார். தனக்கு வழங்கப்பட்ட கடமைகளைச் செவ்வனே ஆற்றி கல்லூரியின் சகல செயற்பாடுகளிலும் தனது பங்களிப்பை முழுமையாக வழங்கி, கல்லூரியின் நிர்வாகத்தின் சிறந்த செயற்பாட்டிற்கு முழுமனதோடு செயலாற்றியவர். மாணவர் நலனில் அதிக அக்கறை கொண்டவராகவும், பாடசாலைச் சமூக உறவினைச் சிறந்த முறையில் பேணி, சக ஆசிரியர்களுடன் தனது அனுபவ, அறிவுகளைப் பகிர்ந்து அன்புடன் பழகியவர். இவர் 14.04.2008 இல் தனது சுயவிருப்பின் பெயரில் தனது சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். இவர் கல்லூரிக்கு ஆற்றிய சேவைக்காக நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுகாலம் சிறப்பானதாக அமைய இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

***இடமாற்றம் பெற்றுச்சென்றோர்***

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியையாகிய திருமதி செல்வசக்தி. சிறீறங்கன் அவர்கள் 30.04.2008 இலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவர் இடைநிலை வகுப்புக்களில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்களைச் சிறந்த முறையில் கற்பித்ததோடு சாரணியப் பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டு மாணவிகளின் ஆளுமை விருத்திக்குப் பங்களிப்பு வழங்கியவர். இவர் எமது கல்லூரிக்கு ஆற்றிய அர்பணிப்புடன் கூடிய சேவைகளுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புதிதாக இணைந்தோர்*

திருமதி J. செல்வச்சந்திரன்- கலைப்பட்டதாரி, திரு G.சிறீஸ்கந்தமூர்த்தி- சித்திர டிப்ளோமா, திருமதி K. காந்தன் - கணித டிப்ளோமா, திரு. S. நிறஞ்சதுர்க்கன் - தொழில்நுட்ப டிப்ளோமா, திரு. R. இராஜமுகுந்தன் - விஞ்ஞான டிப்ளோமா, திருமதி A. குகபரன் கலைப் பட்டதாரி (வழிகாட்டல் ஆலோசனை), செல்வி K. கியோஜினி – நாடகமும் அரங்கியலும் டிப்ளோமா, திருமதி.Y.யோகநாதன் - கலைப்பட்டதாரி, திரு N. சிறீசங்கர்- வணிகப்பட்டதாரி (தற்காலிக இணைப்பு). இவர்கள் எமது கல்லூரியின் அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என நம்புகின்றேன்.

ஆசிரிய வாண்மை விருத்தி ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் ஆசிரியர்களான செல்வி தனுசா வேலும்மயிலும், செல்வி வித்யரூபா. இரத்தினசிங்கம் ஆகியோர் முதுகல்விமாணிப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துள்ளனர். இவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமதி அ.குகபரன் அவர்கள் முதுகலைமாணி-குடித்தொகை அபிவிருத்தி கற்கை நெறியினையும், திருமதி. அ. கண்ணன், திருமதி ஜெ.செல்வச்சந்திரன், திருமதி ரா. பாலமுரளி ஆகியோர் பட்டப்பின் கல்விடிப்ளோமா கற்கை நெறியினையும் பயின்று கொண்டிருக்கின்றார்கள். கல்வியமைச்சின் மூலம் வழங்கப்படும் ESDFP செயற்றிட்டத்தின் மூலமும் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**கல்விசாரா அலுவலர்கள்:**

| | | |
|---|---|---|
| பாடசாலைப் பணியாளர் | - | 02 |
| ஆய்வுகூட உதவியாளர் | - | 01 |
| சுகாதாரத் தொழிலாளி | - | 01 |
| தோட்டத் தொழிலாளி | - | 01 |
| காவலாளி | - | 01 |
| NAITA கணினிப் பயிலுனர்- | - | 02 |

**மாணவர் விபரம்:**

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 06 – 09 | 214 | 228 | 442 |
| 10 – 11 | 165 | 195 | 360 |
| 12 – 13 | 99 | 110 | 209 |
| | 478 | 533 | 1011 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிதாக அனுமதி பெற்றோர்:**

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 06 | 60 | 46 | 106 |
| 07 | - | 01 | 01 |
| 08 | - | 01 | 01 |
| 09 | - | - | - |
| 10 | 13 | 09 | 22 |
| 11 | - | - | - |
| 12 | 10 | 08 | 18 |
| 13 | 02 | - | 02 |
| | 85 | 65 | 150 |

**க.பொ.த (சா/த) தேர்வு டிசம்பர் 2007 மிகச்சிறந்த பெறுபேறு**

| | |
|---|---|
| செல்வி விஜி.மகாலிங்கம் 7A, 3B | |
| செல்வி கிரிஜா செல்லக்கிளி | 6A, 3B,C |
| செல்வி தர்மசுகி காசிநாதன் | 6A, B,3C |
| செல்வி கனிமொழி கணநாதன் | 5A, 4B, C |
| செல்வி கயல்விழி கணநாதன் | 5A, 3B, 2C |
| செல்வி கஜேந்தினி கனகலிங்கம் | 5A, 3B, 2C |
| செல்வி கல்யாணி தங்கத்துரை | 4A, 3B, 3C |
| செல்வி சிந்துஜா கைலைநாதன் | 4A, 3B, 3C |
| செல்வி சுஜனா நித்தியானந்தம் | 4A, 2B, 4C |
| செல்வி சிந்துஜா செல்வராசு | 4A, 2B, 2C, 2S |

**க.பொ.த (உ/த) தகுதி பெற்றோர்**

| | |
|---|---|
| விஞ்ஞானப்பிரிவு | - 25 |
| வர்த்தகப் பிரிவு | - 08 |
| கலைப் பிரிவு | - 03 |
| | - 36 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க.பொ.த (உ/த) தேர்வு ஆகஸ்ட் 2007 மிகச்சிறந்த பெறுபேறுகள்**

| | | |
|---|---|---|
| பௌதீக விஞ்ஞானம் : | - செல்வன் கிருஷ்ணசாமி. சஞ்சீவன் | - 3A |
| உயிரியல் விஞ்ஞானம் | - செல்வி சவுந்தராஜன் கிரேக்கா | - 2B, C |
| வர்த்தகம் | - செல்வன் சுப்ரமணியம். சிறீரமணன் | - 2A, B |
| கலை | - செல்வன் வரதராசா மகேஸ்வரன் | - 2A,B |

**சிறந்த பெறுபேறுகள்**

**கணிதப்பிரிவு:**

| | | |
|---|---|---|
| K. சஞ்சீவன் | 3A | மாவட்டநிலை 13 |
| P. கிருபாஜினி | 2A,B | மாவட்டநிலை 16 |
| P. கஜந்தன் | 2A, C | மாவட்டநிலை 49 |
| R. ரகுராம் | A, 2C | மாவட்டநிலை 158 |
| S. சரண்ராஜ் | B 2C | மாவட்டநிலை 203 |

**விஞ்ஞானப் பிரிவு:**

| | | |
|---|---|---|
| S. கிரேகா | 2B C | மாவட்டநிலை 80 |
| S. சௌதாமினி | 3C | மாவட்டநிலை 148 |
| N. வாசுகி | 3C | மாவட்டநிலை 247 |

**வர்த்தகப் பிரிவு:**

| | | |
|---|---|---|
| S. ஸ்ரீரமணன் | 2A B | மாவட்டநிலை 46 |
| K. சயந்தா | A 2B | மாவட்டநிலை 65 |

**கலைப்பிரிவு:**

| | | |
|---|---|---|
| P. சுபாகரன் | 2A C | மாவட்டநிலை 183 |
| V. மகேஸ்வரன் | 2A B | மாவட்டநிலை 190 |
| S. ஜெனார்த்தனன் | 3B | மாவட்டநிலை 195 |
| S. தனுஜா | 2A C | மாவட்டநிலை 297 |
| S. கோகிலவாணி | A 2B | மாவட்டநிலை 337 |
| B. சுபித்ரா | A B C | மாவட்டநிலை 378 |
| B. பகிர்பரன் | 2A C | மாவட்டநிலை 561 |
| S. விஜயகுமார் | A 2B | மாவட்டநிலை 586 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் 2007**

| | |
|---|---|
| பௌதிக விஞ்ஞானம் | 06 |
| உயிரியல் விஞ்ஞானம் | 07 |
| வர்த்தகம் | 05 |
| கலை | 35 |
| | 53 |

**பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் 2007/2008**

பொறியியல் — செல்வன் K. சஞ்சீவன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்)
செல்வி P. கிருபாஜினி (மொறட்டுவ பல்கலைக்கழகம்)
செல்வன் P.கஜந்தன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்)

பௌதிகவிஞ்ஞானம — செல்வன் S. சரண்ராஜ் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்: செல்வன் ர.ரகுராம் (வவுனியா பல்கலைக்கழகம்)

விவசாயம் — செல்வி S. சௌதாமினி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

Radiography — செல்வி S. கிரேக்கா (பேராதனைப் பல்கலைக்கழகம்)

முகாமைத்துவம் — செல்வன் S. ஸ்ரீரமணன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
செல்வி K. சயந்தா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கலை — செல்வன் P. சுபாகரன் (சப்ரகமுவ பல்கலைக்கழகம்)
செல்வன் V. மகேஸ்வரன் (சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

க.பொ.த (சா/த), க.பொ.த(உ/த) தேர்வுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கும் 2007/2008 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதி பெற்றோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களை வழிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகட்கும் எனது பாராட்டுக்கள் உரியனவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கில மொழி மூலக்கல்வி**

தரம் 6,7,8,9 ஆகிய வகுப்புக்களில் கணிதம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், வரலாறு, குடியுரிமைக் கல்வி, புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்கள் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு மாணவர்கள் முதன்முதலாக ஆங்கில மொழி மூலம் தோற்றவுள்ளனர்

**பரிகாரக்கற்பித்தல்**

எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் மெல்லக் கற்போருக்கான மாலை நேர வகுப்பக்கள் தரம் 6, 10 மாணவர்களுக்கு நடைபெறுகின்றன. திரு P. சுபாகரன், திரு.K.கணேசமூர்த்தி ஆகியோர் பங்களிப்பு வழங்கி வருகின்றனர்

## இணைபாடவிதான செயற்பாடுகள்

**விளையாட்டுத் துறை:**

வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி 15.02.2008 இல் சிறப்பாக நடைபெற்றது. எமது கல்லூரி பழையமாணவர் சங்க ஓமான் கிளைத் தலைவர் திரு. A.N. மனுநீதி அவர்கள் பிரதம விருந்தினராகவும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை.எங்கரசு அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

**இல்லங்களின் நிலைகள்:**

| | | |
|---|---|---|
| சிவபாதசுந்தரம் இல்லம் (நீலம்) | 1ஆம் இடம் | 697 புள்ளிகள் |
| கனகரத்தினம் இல்லம் (சிவப்பு) | 2ஆம் இடம் | 634 புள்ளிகள் |
| விலோபி இல்லம் (தங்கம்) | 3ஆம் இடம் | 477 புள்ளிகள் |
| செல்லப்பா இல்லம்(பச்சை) | 4ஆம் இடம் | 442 புள்ளிகள் |

**முதன்மை வீரர்கள்**

| வயதுப் பிரிவு | ஆண் | பெண் |
|---|---|---|
| U13 | நா. நிலூஜன் | K. சுகந்தினி |
| | | K. நிருஜா |
| | | M. நிதர்சனா |
| | | P. புவித்தா |
| | | K. கீர்த்திகா |
| U15 | ரா. துவாரகன் | தே. காயத்திரி |
| | ந. ஜெயச்செந்தூரன் | |
| U17 | பா. சிவராஜ் | S. ஜெயரஞ்சினி |
| | ச. சண்மதுரன் | |
| U19 | ச. கருணாகரன் | P. வரலஷ்சுமி |
| | ம. சஞ்சீபன் | P. நிருசா |
| U21 | பா. சிவதாஸ் | K. சொரூபிகா |
| | ர. ரகுராம் | K. விஜித்தா |
| | | S. ஜெயலஷ்சுமி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரி மாணவர்கள் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட, மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர். பெறுபேறுகள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**கோட்ட மட்டம்**

| | |
|---|---|
| முதலாமிடம் | 39 |
| இரண்டாமிடம் | 26 |
| மூன்றாமிடம் | 10 |

**அஞ்சல் ஓட்டம்**

| | |
|---|---|
| முதலாமிடம் | 06 |
| இரண்டாமிடம் | 03 |
| மூன்றாமிடம் | 02 |

**முதன்மை வீரர்:-**

***கோட்ட மட்டம்:***

செல்வன் இ.துவாரகன்

செல்வன் பா.சிவதாஸ்

***வலயமட்டம்:***

செல்வன் ர. ரகுராம்

சங்கானைக் கோட்ட மெய்வன்மைப் போட்டியில் எமது கல்லூரி தொடர்ந்து மூன்றாவது தடவை முதலாவது இடத்தினைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மெய்வன்மைப் போட்டி முடிவுகள் 2008

| மாணவர் பெயர் | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|
| சீ. அருண்பிரசாத் | 100M | 2 | - |
| இ. துவாரகன் | 100M தடைதாண்டல் | 1 | - |
| | நீளம் பாய்தல் | 2 | - |
| ந. ஜெயச்செந்தூரன் | 100M | 2 | - |
| | 200M | 1 | - |
| | தட்டெறிதல் | 3 | - |
| ர. ஐங்கரன் | ஈட்டி எறிதல் | 3 | - |
| அ. கௌதமன் | 800M | 3 | - |
| ம. சஞ்சீபன் | 400M தடைதாண்டல் | 2 | - |
| அ. ஜசிந்தன் | 100M | 2 | - |
| | நீளம் பாய்தல் | 1 | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சு.கருணாகரன் | 800M | 2 | - |
| | 1500M | 3 | - |
| ச.தர்ஸ்சன் | நீளம் பாய்தல் | 3 | - |
| | முப்பாச்சல் | 3 | - |
| ச.டெயதாஸ் | 400M | 3 | - |
| இ.சாந்தன் | 200M | 2 | - |
| பா.சிவதாஸ் | 110Mதடைதாண்டல் | 2 | 2 |
| | முப்பாய்ச்சல் | 3 | - |
| | கோலூன்றிப் பாய்தல் | 3 | - |
| த.லிங்கேஸ்வரன் | 400M தடைதாண்டல் | 1 | 1 |
| கு.பாலகுமார் | 400M | 1 | 1 |
| | 800M | 3 | - |
| ஜெ.துளசிதரன் | உயரம் பாய்தல் | 2 | - |
| ற.றகுராம் | 100M | 1 | - |
| | 200M | 2 | - |
| | நீளம் பாய்தல் | 1 | 3 |
| நா.டினோபன் | 5000M | 2 | - |
| பா.வரலஷ்சுமி | 100M தடைதாண்டல் | 2 | - |
| | நீளம் பாய்தல் | 2 | - |
| | முப்பாய்ச்சல் | 2 | - |
| ச.ஜெயலஷ்சுமி | 100M | 2 | - |
| அ.நிரோசா | முப்பாய்ச்சல் | 3 | - |
| **அஞ்சல் ஓட்டம்** | | | |
| **வயதுப் பிரிவு** | | | |
| 13 வயது ஆண் | 4 x 100M | 1 | 2 |
| 15 வயது ஆண் | 4 x 100M | 2 | - |
| 15 வயது ஆண் | 4 x 400M | 2 | - |
| 19 வயது ஆண் | 4 x 100M | 2 | - |
| 19 வயது ஆண் | 4 x 400M | 1 | - |
| 21 வயது ஆண் | 4 x 100M | 2 | 2 |
| 21 வயது ஆண் | 4 x 400M | 1 | 2 |
| 19 வயது பெண் | 4 x 100M | 1 | 2 |
| 21 வயது பெண் | 4 x 400M | 3 | - |

மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாமிடம் பெற்ற வீரர்கள் மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவிளையாட்டுக்களும், உள்ளக விளையாட்டுகளும்

| விளையாட்டுக்கள் | கோட்டம் | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|
| வலைப்பந்து U17 பெண் | 2 | - | - |
| வலைப்பந்து U17 பெண் | 2 | - | - |
| கரப்பந்து U17 பெண் | 3 | - | - |
| கரப்பந்து U17 பெண் | 2 | - | - |
| உடற்பயிற்சி U17 பெண் | 1 | - | - |
| உடற்பயிற்சி U17 ஆண் | 1 | 2 | 3 |
| பூப்பந்து U17 ஆண் | 1 | 3 | - |

✱ வலிகாமம் வலய விஷேட கல்விப்பிரிவினரால் நடாத்தப்பட்ட மாற்று வலுவுள்ளோருக்கான வலயமட்ட மெய்வன்மைப்போட்டியில் றஜிதா பாலச்சந்திரன் முதன்மை வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

✱ யா/யாழ்ப்பாணக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட MARY ELIAS MEMORIAL NETBALL TOURNAMENT இல் 13 வயதின் கீழ் வலைப்பந்தாட்ட அணியினர் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

✱ **விளையாட்டுக்குழு:-** திரு.N.திருக்குமரன் அவர்களைச் செயலாளராகக் கொண்டு இக்குழு சிறப்பாக இயங்கி வருகின்றது. திரு. V. சண்முகநாதன், திருமதி. A. சற்குணசிங்கம், திரு.S.திருக்குமார், திரு. T. சிவயோகலிங்கம், திரு. M. ஞானசேகரன், செல்வி. N. ஜெயகௌரி, செல்வி. L. தம்பிஐயா, திரு. N. சிவரூபன், திருமதி.R.சேந்தன் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

✱ **தோற்பந்துக் கிரிக்கெட்:-** எமது கல்லூரியின் 17 வயதின் கீழ் அணியினர் ''லக்பிமா'' சுற்றுப் போட்டியில் பங்குபற்றி வருகிறனர். இவர்களுக்குப் பயிற்றுனராக திரு.S.சிவரூபன் அவர்களும், பொறுப்பாசிரியராக திரு.A.பிரபாகரன் அவர்களும் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

✱ **சதுரங்கம்:-** பாடசாலை மட்டத்தில் இல்லங்களுக்கிடையிலான போட்டிகள் வைக்கப்பட்டுத் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவோர் கோட்ட, வலயப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர். மாணவர்களின் திறன்களை வளர்த்தெடுப்பதில் ஆசிரியர்களான திருமதி.அ.கண்ணன், திரு.N.சிவரூபன், பழைய மாணவன் திரு.R.ரகுராம் ஆகியோர் பங்களிப்பு வழங்கி வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008ஆம் ஆண்டிற்கான முதன்மை வீரர்கள் விபரம்

| | |
|---|---|
| 01. சிறந்த உதைப்பந்தாட்ட வீரர் | - ம. சஞ்சீவன் |
| 02. சிறந்த கரப்பந்தாட்ட வீரர் | - அ. யசிந்தன் |
| 03. சிறந்த துடுப்பாட்ட வீரர் (மென்பந்து) | - உ. றஞ்சன் |
| 04. சிறந்த துடுப்பாட்ட வீரர் (தோற்பந்து) | - இ. கரன் |
| 05. சிறந்த வலைப்பந்தாட்ட வீரர் | - ஏ. நந்தினி |
| 06. சிறந்த கரப்பந்தாட்ட வீரர் | - இ. பராசக்தி |
| 07. சிறந்த மெய்வல்லுநர் வீரர் | - கு. பாலகுமார் |
| 08. சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனை | - ச. ஜெயலஷ்சுமி |
| 09. சகலதுறை ஆட்டக்காரர் ஆண் | - ச. தர்சன் |
| 10. சகலதுறை ஆட்டக்காரர் பெண் | - பா. வரலஷ்சுமி |
| 11. சிறந்த பெண் சாரணம் | - ம. கார்த்திகா |
| 12. சிறந்த சாரணர் | - சி. முரளிதரன் |
| | - வி. குகதாஸ் |

மேற்குறிப்பிட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர், வீராங்கனைகட்கும், பயிற்றுனர், பொறுப்பாசிரியர்கட்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மாணவர் மன்றங்கள்

✶ **இந்துமன்றம்:-**

இம்மன்றம் எமது கல்லூரியில் அமைந்திருக்கும் சிவகாமி சமேத நடராஜர் ஆலயத்தில் தினசரி பூசைகள், நாயன்மார்குருபூசைகள், நடேசரபிசேகங்கள், நவராத்திரி பூசைகள் ஆகிய சமய நிகழ்ச்சிகள் யாவற்றையும் நடாத்தி வருகின்றது. வருடந்தோறும் சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை உபயத்தினை திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு சென்று சிறப்பாக நடாத்தி வருகின்றது.

சிவபூமி முதியோர் இல்லத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினத்தில் கலைநிகழ்ச்சிகள் நடாத்துதல், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் பஜனை நடாத்துதல், சந்நிதியான் ஆச்சிரமத்தில் இசை நிகழ்ச்சிகள் வழங்கல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை உடையது.

இதன் தலைவராக செல்வன்பா.டயஸ்மாறன், செயலாளர் செல்வன். ஆ.செல்வச்சந்திரன், பொருளாளர் செல்வன். T. வினோத் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். பொறுப்பாசிரியர்களாக திரு. S. திருக்குமார், திரு. K. சிவகுமார் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **உயர்தர மாணவர் மன்றம் :-**

இம்மன்றத்தின் ஒன்றுகூடலும் மதிய போசன விருந்தும் 2008/05/03 இல் இடம்பெற்றது. எமது கல்லூரிப் பழைய மாணவனும் தெல்லிப்பழைக் கல்விக்கோட்டப் பணிப்பாளருமாகிய திரு.S.கைலாசநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்கள்.

இம்மன்றம் வருடந்தோறும் பொதுஅறிவுப் போட்டிகளை நடாத்தி வெற்றிபெறும் மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வருகின்றது. இம்மன்ற உறுப்பினர்கள் 45 பேர், பழையமாணவர், பெற்றோர், ஆசிரியர் ஆகியோரை இணைத்து யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர். மேலும் கல்லூரி முன்றலில் அமைந்துள்ள சரஸ்வதி சிலைக்கு வர்ணம் தீட்டிப் பராமரித்தும் வருகின்றது.

இதன் தலைவர் செல்வன். T. லிங்கேஸ்வரன், செயலாளர் செல்வன். R. தனுசன், பொருளாளர் செல்வன். S. ஆதிரஜனன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். துணைக்காப்பாளர்களாக திரு. A. பிரபாகரன், திரு. T. சிவயோகலிங்கம், திருமதி. T. நேசராணி, திருமதி. N. பிரணவரூபன், திருமதி. K. தேவசுதன், திருமதி. ப. யோகநாதன், திருமதி.வி. கனகேந்திரன் ஆகியோர் செயற்படுகின்றனர்.

★ **உயர்தர விஞ்ஞான மன்றம்:-**

இம்மன்றம் க.பொ.த(சா/த) மாணவர்களுக்கு விஞ்ஞான செய்முறை விளக்க வகுப்புகளை வருடந்தோறும் நடாத்தி அவர்களின் செய்முறை அறிவினை வளர்த்து வருகின்றது. சகல வகுப்பு மாணவர்களுக்கும் கணித விஞ்ஞான பொதுஅறிவுப் போட்டியினைநடாத்தி, வெற்றியீட்டும் மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கி வருகின்றது. தலைவர் ப. பிரகாஷ், செயலாளர் ச. தாரணி, பொருளாளர் செ. உமாசங்கர் ஆகியோர் செயற்படுகின்றனர். பொறுப்பாசிரியர்களாக திரு. சி. சிவயோகலிங்கம், திருமதி. நி. பிரணவரூபன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

★ **வணிக மன்றம்:-**

பாடசாலை மட்ட வணிகப்பொது அறிவுப் பரீட்சையை நடாத்தி தகுதியான மாணவர்களைத் தெரிவு செய்து கோட்ட, வலய மட்டப் போட்டிகளுக்குப் பயிற்றுவித்தல், இலங்கை வங்கி (மானிப்பாய்க் கிளை) சேமிப்பு அலகை நிறுவி பாடசாலையில் மாணவர் சேமிப்புப் பழக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளைக் கொண்டது. தலைவர் இ. தனுசன், செயலாளர் க. சுதாகரன், பொருளாளர் சி. ஆதிரஜனன் ஆகியோரும் பொறுப்பாசிரியராக திரு.இ.கைலைவாசன் அவர்களும் செயற்படுகின்றனர்.

**✶ சமூகவிஞ்ஞான மன்றம்:-**

வாரந்தோறும் பொதுஅறிவு வினாக்களும், விடைகளும் பொதுக்கரும்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டு, வருட இறுதியில் பொதுஅறிவுப் போட்டி நடாத்தப்பட்டு வெற்றியீட்டும் மாணவர்களுக்கு பரிசு வழங்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். தலைவர் ம. சஞ்சீபன், செயலாளர் பா.கோசலா, பொருளாளர் சி.ஜென்சி ஆகியோரும் பொறுப்பாசிரியராக திருமதி.அ.சற்குணசிங்கம் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்.

**✶ தகவல் தொழில் நுட்பக் கழகம்:-**

இக்கழகத்தின் தலைவராக இ.தனுசன், செயலாளராக S. ஆதிரஜனன், பொருளாளராக திரு. K. கணேசமூர்த்தி (ஆசிரியர்) ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். மாகாணமட்ட மென்பொருள் ஆக்கப்போட்டியில் மாணவர்களும், ஆசிரியர்களும் பங்குபற்றுவதற்கு இக்கழகம் உதவி வருகின்றது. இப்போட்டியில் வெற்றிபெற்ற கல்லூரி ஆசிரியை திருமதி. S. கண்ணதாசன் அவர்களுக்கு ICDL புலமைப்பரிசில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவருக்கு எமது பாராட்டுகள் உரித்தாகுக. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக செல்வி. V. தனுசா அவர்கள் சிறப்பாகச் செயற்படுகிள்றார்.

**✶ ஆங்கில மன்றம் :-**

இம்மன்றம் 25.06.2008 இல் ஆங்கில தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடியது. வலிகாமம் வலய ஆங்கிலபாட முதன்மை ஆசிரியர் திரு. V. மகாதேவன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். கோட்ட, வலய, மாவட்ட மட்டப்போட்டிகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவித்து அவர்கள் வெற்றிபெற வழிவகுத்து வருகின்றது.

இதன் தலைவராக ம.கார்த்திகா, செயலாளர் கு. லிங்கேஸ்வரன், பொருளாளர் க.செந்தூரன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். பொறுப்பாசிரியராக திருமதி. S. தேவராஜா சிறப்பாகச் செயற்பட்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## English Day Competition 2008

| Grade | Name | Event | Divisional Level | Zonal Level |
|---|---|---|---|---|
| 6 | C.Shamini | Recitation | 3rd PLace | |
| | B.Mithusha | Copy Writing | 1st Place | |
| 7 | B.Mithuvanthi | Creative Writing | 2nd Place | |
| 8 | T.Gayathiri | Creative Writing | 1st Place | 2nd Place |
| | T.Gayathiri | Dictation | 1st Place | 2nd Place |
| | T.Vigitha | Dictation | 2nd Place | |
| 9 | K.Gayathiri | Dictation | 3rd PLace | |
| | S.Karunya | Copy Writing | 3rd PLace | |
| 10 | M.Mithula | Dictation | 3rd PLace | |
| 11 | S.Lavanya | Copy Writing | 3rd PLace | |
| 12 | P.Rathy | Dictation | 1st Place | |
| | P.Rathy | Creative Writing | 2nd Place | 3rd PLace |
| | K.Kajenthini | Copy Writing | 3rd PLace | |
| | S.Suganya | Impromptu | 3rd PLace | |
| 13 | U.Sugirtha | Dictation | 1st Place | 3rd PLace |
| | U.Sugirtha | Impromptu | 2nd Place | |
| | S.Sivalenuga | Oratory | 3rd PLace | |
| | P.Prakash | Copy Writing | 3rd PLace | |
| | | Junior Drama | 2nd Place | |
| | | Senior Drama | 2nd Place | |

**✶ நுண்கலை மன்றம் :-**

மாணவர்களின் கலைத்திறன்களை வளர்க்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது. தமிழ்மொழித்தினப் போட்டிகளில் மாவட்ட, மாகாண மட்டத்தில் பங்குபற்றும் மாணவர்களுக்கான செலவுகளைப் பொறுப்பேற்றல், வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் போன்ற செயற்பாடுகளையும் கொண்டது. சென்ற வருடம் பரதநாட்டிய செய்முறை விளக்கம் எனும் இறுவட்டினையும் தயாரித்து வெளியிட்டுள்ளது.

இதன் தலைவர் லோ. சுதாகரன், செயலாளர் க. கார்த்திகேயன், பொருளாளர் ச.சுகிர்தன், அவர்களும் பொறுப்பாசிரியராக திருமதி. S.கண்ணதாசன் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

**✶ சுகாதார மன்றம் :-**

மாணவர்களிடையே சுகாதாரம் பேணல் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பொதுச்சுகாதார பரிசாரகரின் உதவியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தொற்று நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்தியுள்ளது. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் நடாத்தப்பட்ட காசநோய் சம்பந்தமான விழிப்புணர்வுக் கண்காட்சியில் நாடக, நடன நிகழ்ச்சிகளை வழங்கி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

தலைவர் இ. அபிராமி, செயலாளர், ஜீ. மாதுரி, பொருளாளர் கு.நிரோஜினி, ஆகியோரும் பொறுப்பாசிரியர்களாக திருமதி. T. நேசராணி, திருமதி. K. குலநாயகம் அவர்களும் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

✱ **சுற்றாடல் பாதுகாப்புக் கழகம் :-**

பாடசாலையின் சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதற்காக பல செயற்றிட்டங்களைச் செயற்படுத்தி மாணவர்களிடையே சூழற்பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. பாடசாலைச் சூழலை அழகுபடுத்தும் செயற்பாடுகளிலும் இக்கழகம் ஈடுபட்டு வருகின்றது. பொறுப்பாசிரியராக திருமதி. யா. சத்தியசீலன் அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

✱ **தமிழ் மொழித்தினக் குழு :-**

தமிழ்ப்பாட ஆசிரியர்களான திருமதி.இ.தவநாயகம், செல்வி. பூ.ஜெயமலர், திருமதி. ம.நேசமலர், திருமதி. ஞா. மகேஸ்வரன் ஆகியோரும், அழகியல் பாட ஆசிரியர்களான திருமதி. ஸ்ரீ. கண்ணதாசன், திருமதி. ப. முகுந்தன், திருமதி. ப. குமரகுரு ஆகியோரும் இணைந்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். தமிழ்மொழித்தினப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் வெற்றிபெறுவதற்கு அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். இவர்களுக்கு எனது பாராட்டுகள் உரித்தாகுக.

## தமிழ்மொழித்தினப் போட்டிகள் 2007

| பெயர் | நிகழ்ச்சி | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| உ.சுகிர்தா | சிறுகதை ஆக்கம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | | |
| ந.அபிராமி | தனிநடனம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | | |
| த.பாதுஜா | தனிநடனம் | 1ஆம் இடம் | 3ஆம் இடம் | | |
| தே.காயத்திரி | பேச்சு | 2ஆம் இடம் | | | |
| சி.ஜெயரஞ்சினி | பேச்சு | 2ஆம் இடம் | | | |
| செ.கிரிஜா | பேச்சு | 2ஆம் இடம் | | | |
| ந.கௌரி | தனிஇசை | 1ஆம் இடம் | | | |
| | குழுஇசை பிரிவு1 | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | | |
| | குழுநடனம் திறந்த போட்டி | 1ஆம் இடம் | | | |
| | விசேட கூத்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| | வில்லிசை | 2ஆம் இடம் | | | |
| | தமிழறிவு வினாவிடை | 2ஆம் இடம் | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ✶ ஓவிய மன்றம் :-

இம்மன்றம் கல்லூரியில் "இவ்வார ஓவியர்" எனும் காட்சிப்படுத்தற் பலகையை அமைத்து மாணவர்களின் சிறந்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்தி வருகின்றனர். கல்லூரியின் கட்டிடங்கள் அனைத்திற்கும் பெயர் பொறித்து உதவியுள்ளனர். மன்ற மாணவர்களினால் "ஓவியமுத்துக்கள்" எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது. மன்றப் பொறுப்பாசிரியர் திரு. G. சிறீஸ்கந்தமூர்த்தி அவர்களின் ஆக்கமான "மெய்நிலைக்கோடுகள்" எனும் நூலை இம்மன்றம் வெளியிட்டுக் கௌரவித்தது.

வலயமட்ட ஓவிய, சிற்பப் போட்டிகளில் க.லிங்கேஸ்வரன் 2ஆம் இடத்தையும், லோ.சுதாகரன் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். "கலைஒளி" ஓவிய மன்றம் மாவட்டரீதியில் ஓவியப்போட்டியில் சிறபுத்தெரிவாகி லோ.சுதாகரன், க.லிங்கேஸ்வரன் ஆகியோர் வெற்றிக்கிண்ணங்களையும், S.சுதர்சன் சிறப்புப்பரிசிலையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். தலைவர் நா.கிருஸ்ணரூபன், செயலாளர் செ. நிதர்சன், பொருளாளர் க.லிங்கேஸ்வரன், பொறுப்பாசிரியர் ஆகியோருக்கு எனது பாராட்டுகள்.

### ✶ ஆசிரியர் கழகம் :-

இக்கழகத்தின் தலைவராக செல்வி.பூ.ஜெயமலர், செயளாளர் திருமதி.நி.பிரணவரூபன், பொருளாளர் திரு.G.சிறீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் செயற்படுகின்றனர். இக்கழகம் ஆசிரியர்களின் நலனோம்பலில் ஈடுபடுவதுடன் மாணவர்களுக்கான புத்தகசாலையையும் நடத்தி சகாய விலையில் பொருட்களை வழங்கி வருகின்றது. ஆசிரியர் ஒவ்வொருவரினது பிறந்த நாளன்று வாழ்த்துமடல் அனுப்புவதன் மூலம் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றது. ஆசிரியர்களின் இன்பதுன்ப நிகழ்வுகளில் பங்குபற்றுவதோடு திருமண பந்தத்தில் இணையும் ஆசிரியர்களுக்கு வரவேற்பு உபசாரமும் நடாத்தி வருகின்றது. இக்கழகம் பரிசளிப்பு விழாவிற்கு நிதியுதவியும் வழங்கி வருகின்றது.

### ✶ ஒழுக்காற்று சபை :-

இச்சபையில் 33மாணவமுதல்வர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் கல்லூரியின் அன்றாட செயற்பாடுகள் அனைத்திலும் தமக்களிக்கப்பட்ட கடமைகளைக் கருத்தோடு புரிந்து கல்லூரி நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பெரிதும் உதவி வருகின்றனர். சிரேஷ்டமாணவ முதல்வனாக செல்வன். கு. கணரூபனும், சிரேஷ்ட மாணவ முதல்வியாக செல்வி. கு. சொரூபிகாவும் கடமையாற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்காற்று சபையில் பிரதிஅதிபர், பகுதித்தலைவர்களுடன் திரு. A.பாலசுப்பிரமணியம், திருமதி. செ. தேவராஜா ஆகியோர் செயற்பட்டு இவர்களை வழிநடாத்தி வருகின்றனர்

✶ **சாரணியம்:-**

இவ்வமைப்பு 32 சாரணர்களைக் கொண்டதாகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. இவர்கள் கல்லூரி நிகழ்வுகள், கோட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள், அயற்பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். ஆலயங்கள், சிவபூமி போன்ற பொது அமைப்புக்களில் சிரமதானப்பணிகளையும், கடமைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். **பேடன்** பவல் தினப்போட்டிகளில் பங்குபற்றி மாவட்ட மட்ட நிலைகளையும், மாகாண மட்டச் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர். பொறுப்பாசிரியர்களாக திரு. T. குணத்திலகம், திரு. க. கணேசமூர்த்தி, திரு. கு.சிவகுமார், திரு. N. நிரஞ்சதுர்க்கன் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

✶ **வழிகாட்டிகள்:-**

இவ்வமைப்பு 30 அங்கத்தவர்களைக் கொண்டதாக சிறப்பாக இயங்கி வருகின்றது. கல்லூரியில் சிந்தனை நாள் கொண்டாடப்பட்டது. 22 வழிகாட்டிகளுக்கு மாவட்ட ஆணையாளரின் சின்னம் சூட்டப்பட்டது. கல்லூரியில் 3 நாட்கள் கொண்ட சாரணிய பயிற்சிப் பாசறை நிகழ்த்தப்பட்டது. பொறுப்பாசிரியர்களாக திருமதி.செ.சிறீறங்கன், திருமதி.சு.பாலகுமார் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

## மாணவர் நலன்புரிச் சேவைகள்

✶ **நூலக சேவை:-**

மாணவர்களின் ஓய்வு நேரப்பயன்பாட்டிற்கு 6345 நூல்களைக் கொண்ட கல்லூரி நூலகம் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. நவீன மாதிரி நூலகக் கட்டமைப்பு இல்லாத போதும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் சகல மாணவர்களுக்கும் நூல்களை வாசிப்பதற்கும், இரவல் பெற்று வாசிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தரம் 8A போன்ற வகுப்புகள் வகுப்பறை நூலகங்களை ஏற்படுத்தித் தமது தேவைகளை நிறைவு செய்து வருகின்றன. ஆசிரிய நூலகராக திருமதி.ராதிகா பாலமுரளி அவர்களும், உதவியாளராக செல்வி.V.சுசிகலா அவர்களும் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **வழிகாட்டல் ஆலோசனை:-**

தற்போதைய நிலையில் நாட்டில் நடைபெறும் வன்முறைகள், இயற்கை அனர்த்தங்கள், இடப்பெயர்வுகள், முகாம்வாழ்க்கை, பின்தங்கிய பொருளாதார நிலை போன்ற காரணிகளினால் உளநெருக்கீடுகளுடன் பல மாணவர்கள் காணப்படுகின்றனர். இவர்களை இனங்கண்டு அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அவர்களை வகுப்பறைச் செயற்பாடுகளில் மகிழ்ச்சியான சூழலில் ஈடுபடுத்துவதற்கு இச்சேவை துணைபுரிகிறது. பொறுப்பாசிரியராக திருமதி.அனுராதா குகபரன் அவர்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறார்.

★ **புலமைப்பரிசில் கொடுப்பனவு:-**

எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்க லண்டன், கனடாக் கிளைகளின் அனுசரணையுடன் 48 மாணவர்களுக்கு திறமை, குடும்ப பொருளாதார நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதி வழங்கப்படுகிறது. இந்நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கிய பழைய மாணவர்களுக்கு நன்றிகள் பல.

★ **உலக உணவுத்திட்டம்:-**

இத்திட்த்தின் அனுசரணையால் தரம் 6-9 வகுப்பு மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது. ஏனைய மாணவர்களுக்கும் இதனை விஸ்தரிப்பதற்கு பழைய மாணவர் சங்கத்தின் உதவியை நாடியுள்ளோம். அவர்கள் கைகொடுத்துதவுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு. இத்திட்டத்தைச் சிறப்பாக செயற்படுத்தி வரும் உணவு விநியோகக்குழுவினரான திருமதி. I.தவநாயகம், திரு.ம.ஞானசேகரன், திரு.அ.பிரபாகரன், திரு.க.கணேசமூர்த்தி, செல்வி. L. தம்பிஐயா, செல்வி. ந. ஜெயகௌரி, திரு.N.சிவரூபன், கல்விசாரா ஊழியர் திரு.புஸ்பராஜன் ஆகியோர்க்கும் நன்றிகள் பல.

★ **அடையாள அட்டைகள் பெற்றுக்கொடுத்தல்:-**

தரம் 6 இலிருந்து தரம் 11 வரை வகுப்பு ஆசிரியர்களினால் அஞ்சல் அறிமுக அட்டையும், 16 வயதைப்பூர்த்திசெய்த மாணவர்களுக்கு திருமதி. இ.தவநாயகம், திருமதி. அ. கண்ணன் அவர்களால் தேசிய அடையாள அட்டையும் பெற்றுக்கொடுக்கப்படுகிறது. இவர்களுக்கு எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ **வங்கிச் சேவை:-**

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு இச்சேவை உதவுகிறது. மக்கள் வங்கி சங்கானைக் கிளையில் 399 மாணவர்களும், தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய்க் கிளையில் 322 பேரும் சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கின்றனர். அத்துடன் இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளையும் பாடசாலை வங்கி அலகு ஒன்றை உருவாக்கிச் செயற்பட ஆரம்பித்துள்ளது. திருமதி. S. தங்கராஜா, திரு. E. கைலைவாசன் ஆகியோர் பொறுப்பாசிரியர்களாகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

✶ **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம்:-**

இந்நிலையம் மூலம் சகல வகுப்புகளிற்கும் கணனிகள் கற்பித்தல் சாதனமாகப் பயன்படுத்தப்படுகிறது. பல்வேறு போட்டிகள், கண்காட்சிகள் என்பவற்றிற்கு தேவையான மென்பொருட்களை ஆக்குவதற்கும் இந்நிலையம் மாணவர்களுக்கு உதவுகிறது. இன்ரநெற் சேவையையும் தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் உண்டு. பொறுப்பாசிரியராக செல்வி.V.தனுஷா ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார்.

✶ **கட்புல செவிப்புல சாதன அறை:-**

மாணவர்களின் ஓய்வு நேரப் பயன்பாட்டிற்கும் கற்றல் செயற்பாட்டிற்கும் இவ்வறையிலுள்ள துணைச்சாதனங்கள் பயன்படுகின்றன. பொறுப்பாசிரியராகதிரு.M.ஞானசேகரம் அவர்கள் சிறப்பாகச் செயலாற்றுகின்றார்.

✶ **சிற்றுண்டிச்சாலை:-**

மிகக்குறைந்த வசதிகளுடன் இது இயங்கி வருகின்றது. இதன் வசதிகள் விஸ்தரிக்கப்படவேண்டிய அவசிய தேவை ஏற்பட்டுள்ளது.

✶ **மேலைத்தேய வாத்திய இசைக்குழு:-**

கல்லூரி நிகழ்வுகள், கோட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் ஆகியவற்றைச் சோபிக்கும் இக்குழு திருமதி. ப. முகுந்தன், திருமதி. ப.குமரகுரு, திருமதி. S. கண்ணதாசன் ஆகியோரின் வழிகாட்டலிற் சிறப்பாக இயங்கி வருகின்றது.

ஆயினும் இக்குழுவிற்கு மேலும் பலரக மேலைத்தேய வாத்தியங்கள் சேர்க்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் ஏற்கனவே உள்ள இருபது வருடங்கள் பழமை வாய்ந்த வாத்தியக் கருவிகள் பல புதுப்பிக்கப்பட வேண்டியுமுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**✶ பாடசாலை அபிவிருத்திச் சங்கம்:-**

இச்சங்கமானது கல்லூரியின் அபிவிருத்திப் பணிகள் யாவற்றிலும் தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது. உலக உணவுத்திட்டம் மூலம் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மதிய உணவு வழங்கும் திட்டத்தினைப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. வேள்ட் விசன் லங்கா (World Vision Lanka) நிறுவனத்தினால் எமது கல்லூரி விளையாட்டு மைதான விஸ்தரிப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்ட காணிகளை துப்பரவு செய்து செப்பனிடும் செயற்றிட்டத்தில் இணைப்பாளர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் செயற்பட்டு அத்திட்டம் வெற்றிகரமாக நிறைவடைவதற்கு பங்களிப்பு வழங்கினர்.

கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்கு அனுசரணை வழங்குதல், விளையாட்டுத்துறை அபிவிருத்தி, கல்லூரியின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் தலைவராகக் கல்லூரி அதிபரும் செயலாளராக திரு. ஞா. சிதம்பரநாதன் J.P அவர்களும் பொருளாளராக திரு. ஆ. பிரபாகரன் அவர்களும் செயலாற்றி வருகின்றனர்.

**✶ பழைய மாணவர் சங்கம்:-**

கல்லூரியின் தேவைகளைக் காலத்திற்குக் காலம் இனம்கண்டு உதவிவருகின்றது. ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் தற்காலிக ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கல், ஆசிரிய தின விழாவிற்கு அனுசரணை வழங்கல், விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு உதவுதல், பரிசளிப்பு விழாவிற்கு நிதியுதவி வழங்குதல், மாணவர்களுக்குப் புலமைப்பரிசிற் கொடுப்பனவு வழங்குதல், மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் வகுப்புகளுக்கு அனுசரனை வழங்குதல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் மூலம் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கி வருகின்றது.

இச்சங்கத்தின் தலைவராக திரு.கா.சந்திரபாலன் அவர்களும், செயலாளராக திரு.S.புனிதவதி JP அவர்களும், பொருளாளராக திரு.N.நடராஜா அவர்களும், சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இச்சங்கத்தின் செயற்பாடுகளுக்கு கனடா, அவுஸ்திரேலியா, ஓமான், பிரானாஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளிலுள்ள கிளைச்சங்கங்கள் ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கி வருகின்றன. இவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **முறைசாராக் கல்வி:-**

எமது கல்லூரியில் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் பாடசாலை விட்டு விலகிய மாணவர்களுக்கான ஆங்கில பயிற்சி நெறி நடைபெறுகின்றது. இப்பயிற்சி நெறியின் போதனாசிரியராக திருமதி. S.தேவராஜா அவர்கள் சிறப்பாகச் செயலாற்றுகின்றார். இதன் மூலம் 20 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

## கல்லூரித் தேவைகள்

★ **ஆசிரியர் தேவை:-**

உயர்தர வகுப்பு ஆங்கிலம், அளவையியலும் விஞ்ஞானமுறையும், தமிழ், இரண்டாம் மொழி சிங்களம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

★ **முகாமைத்துவ உதவியாளர் தேவை:-**

அலுவலகப்பணிகளை நிறைவேற்றுவதற்கு காலத்துக்குக் காலம் பட்டதாரிகள் நியமனம் மூலம் கல்லூரிக்கு வழங்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர், திட்டமிடல் நிதி உதவியாளர், நிகழ்ச்சித் திட்டமிடல் உதவியாளர் ஆகியோர் ஆசிரிய நியமனம் பெற்று, ஆசிரியர்களாக மாறிவிட்டனர். இதனால் அலுவலகப் பணிகளை நிறைவேற்றுவதில் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்குகின்றோம்.

★ **பௌதீக வளத்தேவை :-**

- மாணவர் தொகை அதிகமாக உள்ளதாலும், நேரசூசியில் நூலகப் பாடவேளை இடம்பெறுவதாலும் நூல்நிலைய வசதி போதாதுள்ளது. மாதிரி நூல்நிலையம் (A வகை) தேவைப்படுகிறது.
- பழைமை வாய்ந்த பிரதான மண்டபம், சேகரம் மண்டபம் என்பன புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும்.
- விளையாட்டு மைதான விஸ்தரிப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்டுச் செப்பனிடப்பட்ட காணியின் கிழக்கு, தெற்கு எல்லைகளுக்கு சுற்றுமதில் கட்டப்பட வேண்டும். வடக்குப் புறத்தில் ஏறத்தாழ 5 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு மதில் கட்டப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

நூற்று முப்பத்திரண்டு ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கல்லூரியின் ஸ்தாபகர் நிற்சிங்கம் கனகரத்தின முதலியார் அவர்களையும் அவரின் புதல்வரும் நீண்டநாள் மனேச்சருமாகிய கனகரத்தினம் செல்லப்பா அவர்களையும், இக்கல்லூரிக்காக தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் இந்நாளில் நன்றியுடன் விக்ரோறியாக் கல்லூரிச் சமூகம் நினைவு கூருகின்றது.

இவ்வைபவத்திற்கு எமது அழைப்பை ஏற்று வருகை தந்து மெருகூட்டிய பிரதம விருந்தினர், அவர்தம் பாரியார், நினைவுப் பேருரை வழங்கியுதவிய பேராசிரியர் அவர்கட்கும் சிறப்பு விருந்தினர் , கௌரவ விருந்தினர்கள், சகோதரப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், அனைவருக்கும் கல்லூரியின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

எமது கல்லூரியின் அபிவிருத்திக்குத் தேவையான வளங்கள், ஆலோசனை, வழிகாட்டல் வழங்கி வரும் மதிப்பிற்குரிய கல்விப்பணிப்பாளர் திரு. ப.விக்னேஸ்வரன் அவர்கட்கும் பிரதிக்கல்விப்பணிப்பாளரகள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல.

கட்டிட நிர்மாண, புனர்நிர்மாண வேலைகளுக்கு ஆலோசனைகள் வழங்கிவரும் கல்வித்திணைக்களத்தின் பொறியியலாளர், கணக்காளர், தொழில்நுட்ப உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

விளையாட்டு மைதான விஸ்தரிப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்ட காணியை World Vision Lanka நிறுவனத்தினர் ரூ 714,650.00 செலவில் புனரமைப்புச் செய்து மைதானமாக வழங்கியுள்ளனர். இப்பணியை மேற்பார்வை செய்துதவிய தொழில்நுட்ப உதவியாளர்களான திரு. S.சுரேஸ், திரு. S.மயூரன் ஆகியோருக்கும் திட்ட இணைப்பாளர் திரு.S.றொசாரோ அவர்கட்கும் கல்லூரியின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கல்லூரியைச் சிறந்தமுறையில் நடாத்திச் செல்வதற்கு உதவும் பிரதி அதிபர் திரு V. சண்முகநாதன் அவர்களுக்கும், பல்வேறு பொறுப்புக்களையும் மனப்பூர்வமாக ஏற்று அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் பகுதித்தலைவர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. S. திருக்குமார், திருமதி A. சற்குணசிங்கம், திருமதி I. தவநாயகம், திரு. N. திருக்குமரன், திரு. E. கைலைவாசன் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரியனவாகும்.

எமது கல்லூரியின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு அர்ப்பணிப்படன் செயற்ப்பட்டு வரும் துணை ஆளணியினர்க்கும் நன்றிகள் பல. இப்பரிசளிப்பு விழாவினைச் சிறப்பாக ஒழுங்கமைத்த விழாக்குழுவினரான திரு. V. சண்முகநாதன் திரு. A. பாலசுப்பிரமணியம், திரு. A. பிரபாகரன், திரு. T. சிவயோகலிங்கம், திரு. K. கணேசமூர்த்தி, திருமதி. I.தவநாயகம், திருமதி. T. நேசராணி, செல்வி V.தனுசா, திருமதி.R.சேந்தன், திருமதி. V.கனகேந்திரன், திருமதி. K. நிதர்சன், திருமதி. A. கண்ணன் ஆகியோருக்கும் நன்றிகள் பல.

2007/2008 நடப்பாண்டுகளில் கல்லூரியின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு அன்பளிப்புக்கள் வழங்கியோருக்கும் உளங்கனிந்த நன்றிகள் பல.

கல்லூரியின் தேவையறிந்து சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம், விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியோருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

எல்லாவற்றிற்கும் மேலாக எம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானுக்கு சிரம்தாழ்த்தி நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.

**நன்றி.**

**அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பெறுவோர் 2008

★ திரு. சி. அப்புத்துரை (சுழிபுரம் மத்தி) அவரது துணைவியார் திருமதி. திலகவதியார் அப்புத்துரை ஞபகார்த்தமாக வழங்கும் புலமைப்பரிசில் பெறுபவர்கள்

(1) த. கதிர்ராஜா (6A) (2) சி. டர்சிகா (7A)

★ திருமதி. த. சுப்பிரமணியம் (பணிப்புலம் பண்டத்தரிப்பு) அவரது கணவர் அமரர். பொ. சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக வழங்கும் புலமைப்பரிசில் பெறுபவர்கள்

(1) யோ. ருஷாந்தி (8A) (2) தெ. தர்சிகா (9A)

★ எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளை வழங்கும் புலமைப் பரிசில் பெறுவோர்

(1) சி. சிவராம் (7A)
(2) பா. மிதுஷா (6A)
(3) த விஜிதா (8E)
(4) இ. கார்த்திகா (9E)
(5) இ. சலோஜன் (13 Com)
(6) ப. ரதி (12 Sci)
(7) ச. விஜயலதா (13 Sci)
(8) ப. நிஜந்தா (13 Com)

★ அமரர் S. சிவராம் ஞாபகார்த்தமாக அவரது மகள் திருமதி. பிரபாகரன் சிவவதனி (Canada) அவர்களால் வழங்கப்படும் புலமைப்பரிசில் பெறுவோர்

(1) சு. பங்கஜா (7A)
(2) கு.அமுதகாசன் (8A)
(3) ப. சிவப்பியா (9A)
(4) இ. சஞ்சீவன் (10A)
(5) க. செந்தூரன் (11A)
(6) செ. கிரிஜா (12 Sci)
(7) பா. சிவதாஸ் ( 13 Arts)
(8) க. நித்தியா (13 Arts)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அமரர் திரு. S. தாமோதரம்பிள்ளை, திருமதி. ப. தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்தமாக திருமதி. சீ. சிவஞானம் (கனடா) அவர்களால் வழங்கப்படும் புலமைப்பரிசில் பெறுவோர்.

(1) க. ஷர்மிலன் (7A)
(2) பா. டெசிந்தா (9A)
(3) ஜீ. மாதுரி (11A)
(4) க. தனீசன் (13 Sci)

★ அமரர் Dr. R. நிற்சிங்கம் ஞாபகார்த்தமாக Dr. திருமதி. R. நவசீலன் (கனடா) அவர்களால் வழங்கப்படும் புலமைப்பரிசில் பெறுவோர்

(1) செ. நிர்மலா (8A)
(2) ப. சிந்துஜன் (10A)
(3) க. வக்சலா (12 Arts)
(4) த. சுரேக்கா (13 Com)

★ அமரர் திரு.ப.சிவஞானம் (முன்னாள் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர்) ஞபகார்த்தமாக சிவஞானம் குடும்பத்தினர் (U.S.A) வழங்கும் புலமைப்பரிசில் பெறுவோர்

(1) க. சயந்தன் (7A)
(2) ச. ஜெசிந்தா (7E)
(3) அ. வனிதா (8A)
(4) த. ஜெனிதா (9A)
(5) ச. அனுசா 10A)
(6) த. மதுரா (10A)
(7) க. கனிமொழி (12 Arts)
(8) கா. வினார்த்தன் (13 Sci)
(9) வ. தனுசாந்தி (13 Arts)
(10) க. விஜிதா (13 Com)

★ அமரர் T. முத்துக்குமாரசாமி ஞபகார்த்தமாக முத்துக்குமாரசாமி குடும்பத்தினர் (கனடா) வழங்கும் புலமைப்பரிசில் பெறுவோர்.

(1) கு. நிருஷா (7A)
(2) அ. தனுசன் (8A)
(3) வ. கவிதா (9A)
(4) த. மதுரா (9A)
(5) தி. சுஜிக்கா (10A)
(6) அ. கௌதமன் (11A)
(7) க. தாரணி (12Com)
(8) க. மனோராசா (13Com)
(9) யோ. தர்சிகா (13Com)
(10) த.லிங்கேஸ்வரன் (13Arts)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப் பரிசில் நிதியுதவி வழங்குவோர்

| வழங்கியவர் | ஞாபகார்த்தம் | பெறுமதி |
|---|---|---|
| 1. திரு.சி.அப்புத்துரை (சுழிபுரம் மத்தி) | திருமதி. திலகவதியார் அப்புத்துரை | 10,000.00 (நி.வை) |
| 2. பழைய மாணவர் சங்கம் (லண்டன் கிளை) | | 80,000 (நி.வை) |
| 3. திருமதி சீ. சிவஞானம் (கனடா) | திரு S. தாமோதரம்பிள்ளை திருமதி. M.தாமோதரம்பிள்ளை | 81,832.00 (நி.வை) |
| 4. Dr. திருமதி. சு. நவசீலன் (கணடா) | Dr சு.நிற்சிங்கம் | 81,832.00 (நி.வை) |
| 5. திருமதி. சிவவதனி பிரபாகரன் (கனடா) | அமரர் S.சிவராம் | 80,000.00 (நி.வை) |
| 6. திரு முத்துக்குமாரசாமி குடும்பம் (கனடா) | அமரர் T.முத்துக்குமாரசாமி | 10,000.00 (நி.வை) |
| 7. திரு சு. விஜயகுமார் | 3A பெற்று பொறியியற்பீடத்திற்கு அனுமதிபெற்ற A. கஜேந்திரனுக்கு வழங்கப்பட்டது | 12000.00 |
| 8. திரு. க. அருணாசலம் | செல்வன். R. சிவராமிற்கு வழங்கப்பட்டது | 2400.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பளிப்பு வழங்கியோர் விபரம் 2007~2008

| | | |
|---|---|---|
| திரு. மு. செந்தில்நாதன் மெல்போன் | அமரர் கந்தசாமி ஞாபகார்த்தம் பல்கலைக்கழக அனுமதி | 24,000.00 |
| பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி | விளையாட்டு உபகரணக் கொள்வனவு<br>விளையாட்டு உபகரணம், தளபாடக் கொள்வனவு | 50,000.00<br>100,000.00 |
| வேள் விசன் லங்கா நிறுவனம் | மைதான புனரமைப்பு | 714,650.00 |
| திரு. அ. நித்தியானந்த மனுநீதி. (தலைவர், ஓமான் பழைய மாணவர் சங்கக்கிளை) | கிணறு புனரமைப்பு<br>முற்பணம் | 200,000.00 |
| இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளை | நூலகத்திற்கான புத்தகக் கொள்வனவு | 10,000.00 |
| கலை மன்றம் | பொதுத்திறமைக்குரிய பரிசுப் புத்தகங்கள் | |
| மாணவர் சங்கம் மெல்போன் கிளை | ஆங்கில நாடக அபிவிருத்தி | 110,526.00 |
| ஆசிரியர் கழகம் | பரிசளிப்பு நிதி | 2000.00 |
| S. விக்னேஸ்வரமூர்த்தி கனடா | | 2000.00 |
| விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் | சிறந்த விளையாட்டு வீரர்,<br>க.பொ.த(சா/த) சிறந்த பெறுபேறு | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/விக்ரோறியாக் கல்லூரி
# பரிசில் நிதியுதவி புரிந்தோர் விபரம்

| வழங்கியவர் | ஞாபகார்த்தம் | துறை | பெறுமதி |
|---|---|---|---|
| திரு. சி. இரத்தினகோபால் | பெற்றோர் | க.பொ.த(உ.த) சிறந்தமாணவன் | ரூ.10000.00 நி.வை |
| திரு. ப. நவரத்தினம் குடும்பம் | - | - | ரூ.1000.00 நி.வை |
| Dr. J. ஆறுமுகம் (சிங்கப்பூர்) | - | - | ரூ.500.00 நி.வை |
| திரு.R.சண்முகரத்தினம் | - | - | ரூ.15000.00 நி.வை |
| திரு. சு. கணபதிப்பிள்ளை (பொன்னாலை) | வரகவி.பே. கிருஷ்ணபிள்ளை | உத்தம மாணாக்கர் | ரூ15000.00 நி.வை |
| ஆறுமுகநாவலர் நூல் வெளியீட்டுக் குழு | சைவப்பெரியார் க. சிவபாதசுந்தரம் அமரர் ந.சபாரத்தினம் | சமயபாடம் | ரூ.3000.00 நி.வை |
| பா.அ.சங்கம் | | | ரூ.25000.00 நி.வை |
| திரு.T.பாலகிருஷ்ணன் (தொல்புரம்) | திருமதி. T. பகவதி தாயார் | க.பொ.த(சா.த) ஆங்கிலம் | ரூ.25000.00 நி.வை |
| திரு. த. ராமச்சந்திரன் மூளாய் சுழிபுரம் | அமரர்.இ.தம்பையா அமரர் Dr. இ. நிற்சிங்கம் | பல்கலைக்கழக அனுமதி | ரூ.2000.00 நி.வை |
| இரத்தினேஸ்வரி கந்தையா (சுழிபுரம் மத்தி) | அமரர் சட்டத்தரணி இராசசுந்தரம் கந்தையா | கலைப்பிரிவு சிறந்த பெறுபேறு | ரூ.5000.00 நி.வை |
| திருமதி. இராசசுந்தரம் இராசம்மா(சுழிபுரம் மத்தி) | அமரர் இ.குமார். சுப்பிரமணியம் | க.பொ.த(உ.த) பௌதீகம் | ரூ.5000.00 நி.வை |
| திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம் (சுழிபுரம் கிழக்கு) | பேப்பர் மணியம் ஆ. சுப்பிரமணியம் | | ரூ.10000.00 நி.வை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| திரு.பா.சண்முகராஜா (சுழிபுரம் கிழக்கு) | தந்தை ஓம் முருகா செ.பொன்னுத்துரை | க.பொ.த(சா.த) விஞ்ஞானம் | ரூ.10000.00 நி.வை |
| திருமதி. S. செல்லத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) | அமரர் A. M. ஸ்பென்சர் | வகுப்பின் ஆங்கில பாடம் | ரூ.5000.00 நி.வை |
| க.பொ.த(உ.த) மன்றம் | அமரர் A. M. ஸ்பென்சர் (Scholarship) | | ரூ.2500.00 நி.வை |
| திருமதி. த. சுப்பிரமணியம் (பனிப்புலம் பண்டத்தரிப்பு) | திரு.பொ. சுப்பிரமணியம் | | ரூ.11000.00 நி.வை |
| திரு. க. தியாகராசா (சுழிபுரம் கிழக்கு) | | | ரூ.11000.00 நி.வை |
| திரு. கு. குணபாலசிங்கம் (பண்ணாகம்) | | | ரூ.10000.00 நி.வை |
| திருமதி. S .விஸ்வலிங்கம் (ஆனைக்கோட்டை) | | | ரூ.10000.00 நி.வை |
| திரு. சி.அப்புத்துரை (சுழிபுரம் மத்தி) | திருமதி.திலகவதி யார் அப்புத்துரை | | ரூ.10000.00 நி.வை |
| கோபாலன் கணபதிப்பிள்ளை | விஸ்வநாதர் கணபதிப்பிள்ளை | | ரூ.10000.00 நி.வை |
| Dr. சின்னையா பாலகிருஷ்ணன் | | | ரூ.25000.00 நி.வை |
| விஸ்வநாதன் பாலகிருஷ்ணன் | விஸ்வநாதர் சின்னையா | விஞ்ஞானத்துறை சிறந்த பெறுபேறு | ரூ.25000.00 நி.வை |
| சிறிறங்கன் இராஜநாயகம் | Dr. ஆறுப்பிள்ளை இராஜநாயகம் | கிரிக்கெட் | ரூ.25000.00 நி.வை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சிறிறங்கன் இராஜநாயகம் | பாலகிருஷ்ணன் | | ரூ.25000.00 நி.வை |
| திரு.V.தாமோதரம்பிள்ளை (அவுஸ்திரேலியா) | | | ரூ.20000.00 நி.வை |
| திரு. S. கனகசபை (ஓய்வு பெற்ற பொறியியலாளர் | அமரர் சுப்பிரமணியம் முத்துக்குமாரு அமரர் திருமதி தெய்வானைப்பிள்ளை அமரர் E. A. கந்தையா அமரர் V. K. தியாகராசா அமரர் S. சுப்பிரமணியம் | | ரூ.100000.00 நி.வை |
| திருமதி. பூமாதேவி துரைச்செல்வம் | | | ரூ.10000.00 நி.வை |
| திரு A.வரதராசா (தொல்புரம்) | அமரர் விஸ்வலிங்கம் தில்லையம்பலம் | திறமைச்சித்தி பெற்ற மாணவர் அன்பளிப்பு | ரூ.10000.00 நி.வை |
| திருமதி. புவனேஸ்வரி சகாதேவன் | அமரர் A. சகாதேவன் | | ரூ.5000.00 நி.வை |
| திரு.V.கோபாலகிருஷ்ணன் ஐயர் | அமரர் முத்துச்சாமி | பல்கலைக்கழக வர்த்தகத்துறை | ரூ.10000.00 நி.வை |
| திருமதி S. தவத்துரையும் பிள்ளைகளும் | அமரர் G.A. தவத்துரை | கலை சட்டம் சிறந்த பெறுபேறு | ரூ.15000.00 நி.வை |

நி.வை - நிரந்தர வைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

வாழ்க நிலமிசை வாழ்கவிக் ரோறியா
வாழிய வாழியவே
வான மவாவிய ஞானக் கலை கொண்டு
மாணவர் வாழ்ந்திடவே
சூழிருள் நீங்கிடவே கனகரத்தினம் ஏற்றிய
சோதி நீ வாழியவே
தூயநல் லறிஞர் செல்லாப்பாச் செம்மல்
செய்பணி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் இன்கலை வீசி
எழில்பெற வாழியவே
எங்கள் கலைமதா இன்பக்கலைச்செல்வி
என்றென்றும் வாழியவே
வாழ்க விக்ரோறியா வாழ்க விக்ரோறியா
வழிவழி வாழியவே
வாழ்வு விளைந்த தனைத்தும் அவித்து
வளர்க கலாலயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org